OS 57/2024

வா.சா. 2 முனிதாஸ் த/பெ ராமசாமி

நாள் 29.10.2025

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. எதற்காக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் எனது நண்பர் பணம் கொடுத்திருக்கிறார் அதற்காக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். நான் எந்த ஊர் என்றால் மோட்டூர் கிராமத்தை சேர்ந்தவர். அரையாளம் கிராமத்திற்கும் மோட்டூர் கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். பாண்டில் எப்போது கையொப்பம் செய்தேன் என்றால் பாண்டு எழுதிய பிறகு கையொப்பம் செய்தேன். பாண்டு எழுதுவதற்கு யார் விவரங்கள் சொன்னது என்றால் அது எனக்கு தெரியாது. பணம் எவ்வளவு வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும் என் முன்பாக தான் பணம் வாங்கினார்கள். பாண்டில் எத்தனை முத்திரை வில்லைகள் ஒட்டப்பட்டிருந்தது என்றால் 2 ஒட்டப்பட்டிருந்தது. பாண்டு எழுதும் போது என்ன நேரம் என்றால் சுமார் 12 மணியிலிருந்து 1 மணி இருக்கும். கையொப்பம் ஒரே பேனாவில் போடப்பட்டதா அல்லது வேறு வேறு பேனாவில் போடப்பட்டதா என்றால் ஒரே பேனாவில் போடப்பட்டது.

2. பிரபாகரன் என்பவர் எத்தனை கையொப்பம் போட்டிருக்கிறார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. பிரபாகரன் ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டிருக்கிறார் என்றால் ஆமாம். பாண்டு எவ்வளவு ரூபாய்க்கு எழுதப்பட்டது என்றால் 2 லட்சத்திற்கு எழுதப்பட்டது. வட்டி எவ்வளவு என்றால் 1 ரூபாய் வட்டி ஆகும். பாண்டில் அடித்தல் திருத்தம் இருக்கிறதா என்றால் எதுவும் இல்லை. பணம் 500 ரூபாய் தாள்களாக 4 கட்டுகள் கொடுக்கப்பட்டது. பிரபாகரன் எப்போதும் கையில் பணம் வைத்திருப்பாரா என்றால் சேலை வியாபாரம் செய்வதில் வரும் பணத்தை வைத்திருப்பார். பாண்டு எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 08.11.2022 ல் எழுதப்பட்டது. பாண்டு வெள்ளை பேப்பரில் எழுதப்பட்டதா அல்லது பச்சை பேப்பரில் எழுதப்பட்டதா என்றால் வெள்ளை பேப்பரில் எழுதப்பட்டது. பிரபாகரன் எனக்கு எவ்வளவு நாட்கள் பழக்கம் என்றால் 15 வருடங்களாக பழக்கம். பிரதிவாதி வேலுவை தெரியுமா என்றால் பணம் வாங்கிய அன்று தான் பார்த்தேன் அதற்கு முன்னர் 2 நாட்கள் வந்து போனதாக சொன்னார்கள். வேலுவிற்கு நேரடியாக பிரபாகரன் பணம் கொடுத்தார்.

3. வேலு பணத்தை எண்ணிபார்த்தாரா என்றால் எண்ணி பார்த்தார். பாண்டு எழுதியவர் ஆங்கியலத்தில் கையொப்பம் செய்தாரா அல்லது தமிழில் கையொப்பம் செய்தாரா என்றால் தமிழில் கையொப்பம் செய்தார். வேலு பணம் வாங்கிக்கொண்டு கையொப்பம் செய்தாரா அல்லது கையொப்பம் செய்த பிறகு பணம் வாங்கினாரா என்றால் கையொப்பம் செய்த பிறகு பணம் வாங்கினார். வேலு பிரபாகரனிடம் பணம் வாங்கவில்லை என்றாலும் பிரபாகரன் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.